# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්



அனைத்து வகையான
அச்சுவேலைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்:

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி
மட்டக்களப்பு.

தொலைபேசி
065-24821



ஒளி - 01 - கதிர் - 218 21-11-2000 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-


## விடுதலைப்புலிகளின் போராட்டம் முழு உலகையும் ஈர்த்துள்ளது !

(வவுனியா)

விடுதலைப்போர் என்ற பாரிணாமத்தில் எமது உரிமைப் போராட்டம் முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றது. போரியல் கலையிலும் விடுதலைப் புலிகள் ஈட்டிவரும் அபார சாதனைகளும் அனைத்துலகையும் திகைப்பில் ஆழத்தி வருகின்றன.

இவ்வாறான எமது இயக்கமும், விடுதலைப்போராட்டமும் சர்வதேச ரீதியில் அடைந்து வரும் புகழை சகிக்க முடியாத

### புலிகளின் தலைவர்

சிங்களப் பேரினவாதம் எதுக்கு அவ்வப்போது அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் விஷமத்தனமான கருத்துரைப்போரை நடத்தி வருகின்றது.

8ம் பக்கம் பார்க்க



**வெள்ளத்தினூடாக பயணம்**

மட்டக்களப்பு பேருந்து நிலையப் பகுதியில் கல்முனை நோக்கி புறப்படும் பேருந்து ஒன்றை முதலாவது படத்திலும், வாவிக்கரையூடாக பயணிக்கும் மாணவர்களை இரண்டாவது படத்திலும், பிள்ளையாரடி தொடக்கம் தன்னாமுனைவரை நீரில் மூழ்கியுள்ள நிலையில் சத்துருக்கொண்டான் உள்வீதியூடாக மட்டநகருக்கான பயணம் மேற்கொள்ளப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு இலட்சம் மக்கள் பாதிப்பு!

## தரவை,அகத்தியர் குளங்கள் உடைப்பு, வாவியின் நீர்மட்டம் உயர்வு வீதிகள் அமிழ்ந்தன, போக்குவரத்து துண்டிப்பு

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. பாதிக்கப்பட்டவர்களின்தொகை 94 ஆயிரத்து 534ஆக அதிகரித்திருப்பதாக அரசாங்க அதிபர் ஆர்.மோனகுருசாமி தெரிவித்தார். வெள்ளப்பாதிப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ஆர்.மோனகுருசாமி தலைமையில் கூட்டம் ஒன்று நேற்றுக்காலையில் நடைபெற்றது.**

பிரதேசசெயலாளர்கள், சமூக சேவைகள் திணைக்கள அதிகாரிகள் சுகாதார திணைக்கள அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்டத்திலிருக்கும் 12பிரதேச செயலாளர்களும் தத்தமது பிரதேசத்திலேற்பட்ட பாதிப்புகளின் விபரங்களை அரச அதிபரிடம் சமர்ப்பித்தனர். சில கிராம சேவையாளர் பிரிவுகளுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் முழுமையான விபரங்களை பெறமுடியாமல் இருப்பதாக பிரதேசசெயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### இரு நாட்களுக்கு சமைத்த உணவு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கு இருநாட்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ஆர்.மோனகுருசாமி தெரிவித்தார் பல கிராமங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்து

8ம் பக்கம் பார்க்க

### என் அன்பிற்கினிய வாசகர்களே !

கடந்த சில தினங்களாக எமது சக்திக்கும் அப்பாற்பட்டு இயந்திரம் கோளாறு செய்ததினால் 'தினக்கதிர்' உங்கள் கரம் சேரவில்லை. பத்திரிகை வெளிவரவில்லை என்றதும் தொலைபேசி மூலமும் நேரிலும் எம்முடன் தொடர்பு கொண்டு காரணம் வினாவி எப்போது இனிப்பத்திரிகை வரும் என ஆதங்கத்துடன் பல வாசகர்கள் எம்மிடம் விசாரித்தீர்கள் எமது பத்திரிகையில்

8ம் பக்கம் பார்க்க

## மாவீரர் வாரத்தை முன்னிட்டு பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பு நகரிலும் பாரிய தாக்குதல்களை நடத்தக் கூடும் என பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன.

இதனை முன்னிட்டு கொழும்பு நகரிலும் மற்றும் புறநகரப் பகுதிகளிலும் விஷேட பாதுகாப்பு நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டன. விஷேட பாதுகாப்பு படை பிரிவுகள் கொழும்பு நகரில் பாதுகாப்பு,

8ம் பக்கம் பார்க்க

## மூதூர் அல்லைப்பாலம் உடைப்பெடுக்கும் ஆபத்து

(மூதூர் அனஸ்)

திருமலை மாவட்டத்திலும் பெய்து வரும் அடைமழை காரணமாக நேற்று முன்தினம் தொடக்கம் மூதூர் திருமலை வீதியில் உள்ள அல்லைப்பாலம் உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

இதன் காரணமாக நேற்று முதல் மூதூரில் இருந்து வெளி மாவட்டங்களுக்கான போக்கு வரத்து சேவைகள் இடம் பெற வில்லை. அல்லைப்பாலம் வரை மட்டுமே போக்குவரத்துக்கள் இடம் பெற்றன.


இதேவேளை வெள்ள அபாயம் நீங்கும் வரை மூதூர் பஸ்

8ம் பக்கம் பார்க்க

**வயலுக்குள் சென்ற வாலிபன்**

## நீரில் மூழ்கி மரணம்

### சடலம் மீட்கப்படவில்லை



(நமது நிருபர்)

வந்தாறுமூலை உப்போடையில் நேற்று முன்தினம் காலை நீரில் மூழ்கி மரணமடைந்த சின்னத்துரை பிரதீப காந்தன் (26) என்னும் இளைஞரின் சடலம் இதுவரை மீட்கப்பட்வில்லை.

8ம் பக்கம் பார்க்க

## புலிகளுடன் தொடர்புகள் வைத்துள்ளேன்

### பிரிட்டிஸ் வெளியுறவு அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை கொண்டு வர தொடர்ந்து பாடுபடுவேன் என பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ம் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் புதுடில்லியில் இந்திய தலைவர்களை சந்தித்து இலங்கை நிலவரம் தொடர்பாக பேச்சுக்கள் நடத்திய பின்பு செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் லண்டனில் உள்ள விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து தொடர்புகளை வைத்துள்ளேன். அதேவேளை நோர்வே சமாதானத் தூதுவர் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் கலந்தாலோசனை நடத்திவருவதாக தெரிவித்தார்.

இதேவேளை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் புதுடில்லி விஜயத்தை முடித்துக் கொண்ட எதிர்வரும் 22ம் திகதி இரு நாள் விஜயத்தை மேற் கொண்டு இலங்கை வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வக்கணை வண்ணக்கர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக மக்கள் அகதிமுகாமில் தஞ்சம்

–செய்தி–



சண்டையென்றாலும் அகதி முகாம் தான், வெள்ளம் வந்தாலும் அகதிமுகாம் தான் மொத்தத்தில் தமிழன் வாழ்வது அகதி முகாமில் தான்

தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

"சோதனை மேல் சோதனை
போதுமடா சாமி
வேதனைதான் வாழ்க்கை என்றால்
தாங்காது பூமி..."

இது கவியரசர் கண்ணதாசனின் ஒரு பாடலில் வரும் ஒரு பகுதி.

இலங்கையில் தமிழ் மக்களின் நிலையை எண்ணித்தான் கவிஞரின் நாவில் இப்பாடல் தோன்றியதோ.

நாடு முழுவதிலுமே தமிழ் மக்கள் சந்தேகத்திற்கிட மானவர்களாகவே கருதப்படுகின்றனர். வீதியில் ஒரு தமிழன் சுதந்திரமாக நடந்து செல்ல முடியாது. வீடுகளில் கூட தமிழன் சுதந்திரமாக, நிம்மதியாக இருக்க முடியாது.

நாடு முழுவதிலும் கடும் மழை பெய்துகொண்டு இருக்கிறது. பல இடங்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கிலும், கிழக்கிலும், ஏற்கனவே போர் நிலைமைகள் காரணமாக தமிழ் மக்கள் வீடு வாசல்களை இழந்தும், வீடுவாசல்களில் இருக்க முடியாதபடி எறிகணைத் தாக்குதல் குண்டு வீச்சுக் காரணமாக இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களைத்தேடி தஞ்சம் புகுந்து அவதிப்பட்டு வருகின்றார்கள்.

இந்த மக்களுக்கு போதிய உணவு வசதியோ, மருந்து வசதிகளோ இல்லை. தங்கும் இடங்கள்கூட சுத்தமாகவோ சுகாதாரமாகவோ இல்லை. இங்குள்ள மக்கள் தொற்றுநோய்களாலும் பீடிக்கப்பட்டு அவதியுறுவதும் சாதாரணம். இந்நிலையில் கடும் மழையும், வெள்ளமும், ஏற்பட்டு இந்த மக்களுக்கு மேலும் மேலும் துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆண்டுதோறும் வருடக் கடைசியில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் கடும் மழை பெய்வதும், வெள்ளப்பெருக்கு ஏற்படுவதும் தொடர் நிகழ்ச்சிதான்.

ஆனால் இம்முறை சற்று முன்னதாகவே அடைமழை பெய்து கொண்டிருக்கிறது. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் பெருமளவில் வீடுவாசல்களை விட்டு வெளியேறி அகதிமுகாம்களில் தஞ்சம் புக நேர்ந்துள்ளது. மட்டக்களப்பு வாவியின் நீர் மட்டம் உயர்ந்து வாவியை அண்டிய பகுதிகளில் வெள்ளம் நிரம்பி வழிகிறது.

படுவான்கரைப் பகுதியிலும் சரி எழுவான்கரைப் பகுதியிலும் சரி கரைப்பகுதியிலும் சரி வெள்ளம் பெருக்கெடுத்து நூற்றிக்கணக்கான குடும்பங்களைக் குடியெழுப்பியிருக்கிறது.

கடல் கொந்தளிப்புக் காரணமாக வாவி நீர் கடலுக்குச் செல்வது தடைப்பட்டிருக்கறது. இதனால் வாவியின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

இந்த நீர் ஊருக்குள் புகுந்து மேலும் பேரழிவை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே போர்ச் சூழலால் வேலைவாய்ப்பை இழந்துள்ள மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மக்கள் கடும் மழையினாலும், வெள்ளப் பெருக்கினாலும், இன்று வேலைவாய்ப்பையும் தொழில் வாய்ப்பையும் இழந்து நிற்கதியாக நிற்கின்றனர்.

கல்வி கற்கும் பிள்ளைகள் மூன்றாந்தவணைப் பரீட்சை எழுதத் தொடங்கிய நேரம் இது. வெள்ளப்பெருக்கினால் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்ட நிலையில் பிள்ளைகள் கல்வி நிலையங்களுக்குச் செல்லவோ பரீட்சை எழுதவோ முடியாத நிலை. ஆண்டு முழுவதும் கண்விழித்துக் கஷ்டப்பட்டு படித்தும் பரீட்சை எழுத முடியாத பரிதாபகரமான நிலையில் அவர்கள் அந்தரித்து நிற்கின்றனர்.

ஏற்கனவே விலைவாசி உயர்வினால் வாழ்க்கைச் சுமையைத் தாங்க முடியாமல் அவதிப்படும் மக்கள் மழையினாலும் வெள்ளத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு உணவுக்கே ஆலாய்ப் பறக்கவேண்டிய நிலையிலுள்ளனர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்களும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

என்னதான் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டாலும் இந்த மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் நீங்க முடியுமா?

வழமையாகவே வடக்கு கிழக்கு மாகாணமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் பாராபட்சம் காட்டும் அமைச்சர்களும் , அரசாங்க அதிகாரிகளும் நியாயமான முறையில் நடந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்க வசதி செய்வார்களா என்ற சந்தேகம் எழுவது இயல்பு.

நிவாரண உதவிகள் வழங்கினால் அது விடுதலைப்புலிகளுக்கும் போய்ச் சேர்ந்துவிடுமென்று முன்னர் மட்டக்களப்பில் இணைப்பதிகாரியாக இருந்தவர் ஒரு தடவை கூறியிருந்தது அவர்களுடைய மனப்பான்மையை எடுத்துக் காட்டியது.

ஆண்டுதோறும் மழை பெய்ததும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை உலக நாடுகளிடமிருந்து பெறும் உதவிகளைக் கொண்டு நன்கு திட்டமிட்டு உரிய முறையில் நிரந்தரமாக நீர்வடிந்து செல்வதற்கும் மழை காலங்களில் நீரைத் தேக்கி வைக்கவும், வழி காண முடியாதா?

மக்கள் பிரதிநிதிகள் இது விஷயத்தில் அரசாங்கத்தை மழை வெள் ளம் நின்ற பின்னர் மறந்து விடாமலும் அடுத்த வெள்ளம் வரும்வரை காத்திராமலும் வற்புறுத்தி நடவடிக்கை மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டுமா?

இப்போதும் மழையாலும். வெள்ளப்பெருக்கினாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் ஒழுங்காகவும், நியாயமானதாகவும், கிடைப்பதற்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கடைமையும் பொறுப்பும் இருக்கிறதென்பதை நினைவூட்டுகிறோம்.

# மட்டக்களப்பை தரைமட்டமாக்கிய பயங்கர சூறாவளியின் நினைவு

**பிறின்ஸ் காசிநாதர்**

22.11.1978 ல் வழக்கம் போல அமைதியாகத் தத்தம் படுக்கைக்குச் சென்ற மட்டக் களப்பு, மறு நாட்காலை கோர இரைச்சலுடன் சீறிவந்த ஒரு சூறாவளியைச் சந்திப்போம் என்று சிந்தித்தும் எண்ணியிருக்க மாட்டார்கள்.

அச்சூறாவளியின் பயங்கர ஓசை படிப்படியாக அதிகரித்து அன்று (23.11.78) மாலை 'ஹோ' என்ற பயங்கர இரைச்சலுடன் வெறியாட்டம் போடத் தொடங்கி விட்டது. சூறாவளியின் இக் கோரத் தாண்டவத்தில், மரங்கள், பேயாட்டம் ஆடின. வீடுகள் நொறுங்கி விழுந்தன.

மட்டக்களப்பு முற்றவெளி சுற்றி உள்ள பாரிய மரங்களில் கூட்டமாகத் தங்கியிருக்கும் ஏராளமான காக்கைகள் ஊழிக்காலம் வந்துவிட்டதைப் போல பயங்கர ஓலமிட்டுக் கொண்டு பறந்து திரிந்தன. அவைகளுக்குப் போட்டியாக வீடுகளில் மேயப்பட்டிருந்த அஸ்பெஸ்டோஸ் கூரைத்தகடுகளும்,பாரசூட்டுக்களைப் போல பறந்து கொண்டிருந்தன.

இந்த அமளிதுமளியில், மிகவும் புராதனமான இருமாடி 'போளிஹவுஸ்' கட்டிடம், இடி முழக்கம் போன்ற பேரிரைச்சலுடன் என் கண்முன்னே இடிந்து வீழ்ந்ததை நான் பார்த்தேன். அப்போது நான் மட்டக்களப்பின் மிகப் பெரிய கல்லூரியான மத்திய கல்லூரி அதிபருக்கான விடுதியில், எனது 80 வயதுத் தந்தையுடன் தங்கியிருந்தேன். சுற்றி நடைபெறும் பயங்கரக் காட்சிகளைக் கண்டு நான் நடுங்கிக் கொண்டிருந்தபோதும் எனது 80 வயதுத் தந்தை மிகவும் அமைதியாக இருந்தார். காரணம் அவருக்குக் காது கேட்காது.

இலங்கையின் வேறெந் தப் பாகத்தையும் விட மட்டக்களப்பை மட்டும் இந்தச் சூறாவளி ஏன் தொடர்ந்து தாக்கி வருகிறது என்பது ஆச்சரியமாகவே உள்ளது. ஏறகனவே 1845,1907,1921 ம் ஆண்டுகளில் சூறாவளி மட்டக்களப்பைத் தாக்கியுள்ளது.

1978ல் வீசிய சூறாவளி பல வருடங்களாக மட்டக்களப்பில் நிலைத்திருந்த 'போளிஹவுஸ்' கட்டிடத்தை ஒரு நொடிப்பொழுதில் தரைமட்டமாக்கியது. ஆங்கிலேயர் காலத்தில் டொக்டர் ஜோர்ஜ் பேரின் வாசஸ்தலமான இக் கட்டிடத்துக்கு ஒரு நீண்ட வரலாறு இருந்தது.

ஐரிஸ் புரட்சிக் காலத்துடனும் 'ஹோ' பிரவுடனும் கண்டியில் 1817ல் 1818ம் ஆண்டுகளில் வெடித்த புரட்சிகளுடன் சம்மந்தமாக்கப்பட்டிருப்பதால் பல வரலாற்று நினைவுகளை இக்கட்டிடம் கொண்டிருந்தது. டொக்டர் போளி, ஐரிஷ் கப்பல் ஒன்றில் ஹோ பிரவுவின் கீழ், சத்திர சிகிச்சை மருத்துவராகப் பணிபுரிந்தவர். அத்துடனமையாது கண்டிப்புரட்சியின் போது இலங்கையின் 2வது படைப் பிரிவிலும் டொக்டராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணத்தில் உள்ள டச்சு மயானத்தில் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த 'போர்ஹவுஸ்' என்னும் இரு மாடிக்கட்டிடத்தை கட்டிய டொக்டர் பேர் தனது மகளாகிய எலியனாருடன் அதில் வசித்து வந்தார். இம்மங்கை சிவில் சேர்விஸ் அதிகாரியான றொபர்ட் அதோட்டன் என்பவரை மணந்திருந்தார். எலியனார் இக்கட்டிடத்தில் 52 வருடங்கள் தங்கியிருந்து ஒரு வாகன விபத்தில் மரணமடைந்தார்.

1978 ல் வீசிய சூறாவளி, கட்டிடங்களை தரைமட்டமாக்கியது போலவே, மட்டக்களப்பின் பொருளாதாரத்தையும் தரைமட்டமாக்கியது. மட்டக்களப்பில் உள்ள 31500 ஏக்கர் தென்னந்தோட்டங்களில் சுமார் 28000 ஏக்கர் தென்னந் தோட்டங்கள் நாசமாயின. 240 பாடசாலைக் கட்டிடங்கள் தரைமட்டமாகின. மட்டக்களப்பின் மீன்பிடி வள்ளங்களில் 1/5 பங்கு அழிந்தது போல் இதனால் மட்டக்களப்பின் இருமருங்கிலுமுள்ள கடலிலும், வாவியிலும், மீன்பிடித்து வாழ்க்கையை நடாத்தி வந்த மீனவர்களின் பிழைப்பில் மண் விழுந்தது.

மட்டக்களப்பில் இருந்த பாரிய நெற்களஞ்சியங்களில் 11 களஞ்சியங்கள் முற்றாக அழிந்தன. 0 நெற்களஞ்சியங்களில் உள்ள நெல்லை, மககளே அள்ளிக் கொண்டு சென்றனர்.

130 மைல் நீளமான மின் கம்பிகள் இச்சூறாவளியில் சிக்கிச் சின்னாபின்னமாகின. இக் கொடிய சூறாவளி வணக்கஸ்தலங்களை ,தேவாலயம், கோவில், பள்ளிவாசல், முதலியவற்றையும் விட்டுவைக்கவில்லை. இச் சூறாவளியில் சுமார் 700 பேர் உயிர் இழந்தனர். காணாமற் போன பலரும் இதில் அடங்குவர்.

நீண்ட காலம் நிலைத்து நின்ற பல பாரிய மரங்கள் வேரோடு சாய்ந்த வீழ்ந்தது .பரிதாபம். குறிப்பாக மட்டக்களப்பு முற்றவெளியைச் சுற்றியிருந்த நிழல்தரு மரங்கள் பல இச் சூறாவளியால் வேரோடு சாய்க்கப்பட்டது சகிக்க முடியாத இழப்பாகும்.

விலைமதிப்பற்ற தேக்க மரங்களும்,தென்னை மரங்களும், இவ்வாறு சாய்க்கப்பட்டு வண்டுகள் விளையும் இடமாகின. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தனது அறிக்கையில் இது பற்றிக் குறிப்பிடுகையில் வேலையாட்களின் கூலி அதிகமாகி விட்டதென குறைப்பட்டிருந்தார்.

இச்சூறாவளியால் பாதிக்கப்பட்ட கள் இறக்குவோரும், குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் தொழிலுக்காக ஆதாரமாக இருந்த தென்னை மரங்கள் இல்லாமல் எவ்வாறு அவர்கள் தொழில் செய்யமுடியும். அவ்வாறே குறைந்த விலையில் கள்ளைக் குடித்து மகிழ்ந்த ஏழைமக்களும், தமது சந்தோஷத்தை இழந்தனர்.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் இச்சூறாவளியால் பாதிக்கப்பட்டன. மின்சாரம் இல்லை. தண்ணீர் இல்லை. விவசாயம். மீன்பிடி, முதலிய எல்லாத் தொழில்களுமே பாதிக்கப்பட்டன. மட்டக்களப்பு மண்ணுக்கு ஒரு பலத்த அடியாக இச் சூறாவளி அமைந்தது. இச் சூறாவளி அதிர்ச்சியிலிருந்து ஓரளவு விடுபட்ட பின் எதிர்காலத்தில் இவ் வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் அவற்றை எப்படிச் சமாளிப்பது என்பது தொடர்பான கூட்டங்களும், கருத்தரங்குகளும், நடைபெற்றன.

ஏற்கனவே இவ்வாறான சூறாவளியால் பாதிக்கப்பட்ட அவுஸ்திரேலியாவில் உள்ள டார்வின் நகருக்கு அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிஅறிவதற்காக இங்கிருந்து சில பிரதிநிதிகளும் அனுப்பப்பட்டனர். அதன் பயனாக கடற்கரை ஓரங்களில் மீனவருக்கு எச்சரிக்கை விடுக்கும் அபாயச்சங்கு நிறுவுதல், கடற்கரை ஓரமாக காற்றைத் தடுக்கும் மரங்கள் நடுதல் சூறாவளி தாக்காது வீடுகள் அமைத்தல் முதலிய திட்டங்கள் தீட்டப்பட்டன.

ஆனால் நாள் செல்லச் செல்ல இவை எதுவுமே நடைபெறவில்லை. கடற்கரை ஓரங்களில் மரங்கள் நடப்பட்டன. ஏனைய திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. மீண்டும் ஒரு முறை அண்மையில் ஓரிசாவில் ஏற்பட்டது போல் ஒரு சூறாவளி இப்பிரதேசத் தைத் தாக்கும் வரை இத்திட்டங்கள் உறைநிலையில் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# பூவுலகை நீந்தி விட்ட புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்

(மருதமுனை நிருபர் நழீம் எம். பதுார்தீன்)

1909.05.04 ல் மருத முனை மண்ணில் பிறந்து மண்ணிற்கு மகிமை தேடிய ஈழத்தின் இணையற்ற தமிழறிஞன், இலக்கிய உலகில் உலாவிய விடிவெள்ளி ஆ.மு. ஷரிபுத்தீன் 16.11.2000 ம் திகதி காலமானார்.

மருதமுனையின் முதலாசிரியர், முதலாவது கல்வி அதிகாரி, அரச ஊழியர்களுள் முதலாவது விதானையார். பன்னூலாசிரியர் என பல வகையிலும் முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும், வாழ்ந்தவர்.

வழக்கு-கிழக்கிலும், கொழும்பிலும் இந்தியாவிலும் இலக்கியத்திற்காக கௌரவிக்கப்பட்டவர் மட்டுமல்ல, மருதமுனை மண்ணும் திரண்டு நின்று பாராட்டிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த கவிஞர் அமைச்சர் அஷ்ரப், மறைந்த பெருறங் கவிஞர்,நீலாவணன், நாடறிந்த எழுத்தாளன். மருதூர்க் கொத்தன், போன்ற கவி வல்லாரும் ஆசிரியர் திலகங்கள், கல்விப்பணிப்பாளா களான எம்.வை.எம்.முஸ்லிம், ர.எச்.எம்.மஜீட் போன்றோரும் தமிழ் வல்லான் ஹசன் மௌலானா, உயர் அதிகாரிகள், சிறுகதை மன்னர்கள் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீனால் நெறிப்படுத்தப்பட்டவர்கள்.

இவரது தன்னலமற்ற சேவையின் அறுவடையே இன்று அவரது மக்கள், பேரர்கள், கல்லூரி அதிபராக, டாக்டர்களாக, பொறியியளாலர்களாக, வங்கியாளர்களாக பல்துறை தொழில் விற்பன்னர்களாகத் திகழ்கின்றனர்.

" எனது ஆற்றலை பிஞ்சுப் பருவத்தில் இனங்கண்டு. உற்சாகப் படுத்திய பேராசான் ஷரிபுத்தீன் என்றும், அமெரிக்காவை கொலம்பஸ் கண்டு பிடித்தார். அஷ்ரப்பை ஷரிபுத்தீன் வாத்தியார் கண்டு பிடித்தார் என்றும் மான்புமிகு அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் புகழாரம் செய்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

அன்னாரின் நல்லடக்கம் 17.11.2000 ஆம் திகதி மருத முனையில் நடைபெற்றது. இதில்

(4ம் பக்கம் பார்க்க)

# சில நியாயங்களுக்கு கட்டுப்பட்ட மனிதன் தான் வீரப்பன்

**சந்தனக்கடத்தல் வீரப்பன் பற்றி விடுதலையான கன்னட நடிகர் ராஜ்குமார் கூறிய கருத்துக்கள் சில இங்கே தரப்படுகின்றது**

கேள்வி- தமிழக-கர்நாடக அரசுகள் உங்கள் மீட்பு முயற்சியில் காட்டிய ஆர்வம் குறித்து...?

பதில்- தூரத்தில் நின்று விமர்சனம் செய்வது யாருக்கும் எளிது. ஆனால் முள்ளில் போட்ட சேலையை மீட்கிற வனுக்குத்தான் அதன் கஷ்டங்கள் புரியும். இரண்டு அரசுகளுமே பக்குவமாக, ஒற்றுமையாக இந்த விஷயத்தை கையாண்டதாகத்தான் நான் நினைக்கிறேன். தூதர்களை அனுப்பாமல் அதிரடிப் படையை அனுப்பியிருந்தால், வீரப்பன் என்னை விட்டுவிட்டு தப்பி ஓடியிருக்கலாம். ஒருவேளை கெட்டதும் நடந்து இருக்கலாமே. வீரப்பன் ஒரு கொடூரவாதி என்கிறார்கள். நான் பார்த்தவரையில் அவர் சில நியாயங்களுக்கு கட்டுப்படக்கூடிய, மனிதாபிமானம் கொண்டவராக தோற்றம் அளித்தார். பெரிய அளவில் எனக்கு சங்கடம் இல்லாமல் பார்த்துக்கொண்டார். முடிந்தவரை நல்ல உணவு. தன்னால் இயன்ற வைத்தியம் என்று ஒரு விருந்தாளியை உபசரிப்பது போலத்தான் என்னை வைத்திருந்தார். வீரப்பனை மட்டுமல்ல. அவருடன் இருந்த சிப்பந்திகளைக் கூட என் உறவுக்காரர்களைப் போல நான் நினைக்கிறேன்.

கேள்வி- வீரப்பனை பிடிப்பதற்கு ஏற்ற ஆலோசனைகளை இப்போது உங்களால் சொல்ல இயலுமா?

பதில்:- வீரப்பன் நாம் நினைக்கிற அளவுக்கு அறிவில்லாதவர் அல்ல. ஒரு சின்ன சந்தேகம் வந்தாலும் முழு எச்சரிக்கை அடைந்து விடுகிறார். அதிகபட்சம் ஒரே இடத்தில் பனிரெண்டு நாட்கள் இருந்தோம். மற்றபடி ஒவ்வொரு இடத்திலும் இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் எங்களை அவர் வைத்திருக்கவில்லை. அவருடன் இத்தனை நாள் இருந்தாலும்கூட, அவரது செயல்முறைகள் இப்படித்தான் இருக்கும் என்று அறுதியிட்டு எதுவும் சொல்ல முடியாது.

கேள்வி- நாகப்பா தப்பித்து தான் வந்தாரா? அதனால் உங்களுக்கு என்ன சிக்கல் வந்தது?

பதில்- பின்னே...? நாகப்பா தப்பி ஓடியதை வீரப்பன் கும்பலில் ஒருத்தரும் எதிர்பார்க்கவில்லை. எங்கள் மீது லேசான அரக்கத்தனத்தை அவர்கள் காட்டினார்கள். என்னை மட்டும் விட்டுவிட்டு, கோவிந்த ராஜ் மற்றும் நாகேஷ் இருவரையும் பின்னால் கைகளை கட்டி துன்புறுத்த ஆரம்பித்தார்கள். நான் வாழ்ந்து அனுபவித்தவன். என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். வாழ வேண்டிய அவர்களை எதுவும் செய்துவிடாதீர்கள் என்று நான் கதறினேன்.

ஆரம்பத்தில் இருந்தே என் மீது இனம்புரியாத ஒரு மரியாதை வைத்திருந்ததால்தான் வீரப்பன் கோபத்தை அடக்கிக் கொண்டார்.

கேள்வி- உங்களுக்கு ஆபத்து இருக்கிறது என்ற தகவலை சொல்லி, போதிய பாதுகாப்புடன் எங்கும் சென்று வரும்படி முன்கூட்டியே அரசு தரப்பில் சொல்லப்பட்டிருந்தது. அதையும் மீறி யாருக்கும் சொல்லாமல் தொட்டகஜனூர் பண்ணை வீட்டுக்கு நீங்கள் சென்றது ஏன்?

பதில்- அதான் பிரஸ்மீட்டிலேயே சொன்னேனே. எல்லாம் என் தலைவிதி. கொடுத்த பாதுகாப்பை ஏற்றுக்கொள்ளாதது என் தவறு என்று இப்போது புரிகிறது. அதேசமயம் மிஞ்சி போனால் இரண்டு போலீசாரை பாதுகாப்புக்கு போடுவார்கள். வீரப்பன் கும்பலின் ஆயுத பலத்துக்கு முன் அந்த போலீசார்தான் என்ன செய்திருக்க முடியும்?

கேள்வி- கோடிக்கணக்கில் பணம் வாங்கிக்கொண்டுதான் வீரப்பன் உங்களை விடுவித்தான் என்று சொல்கிறார்களே?

பதில்- வெளியில் பரப்பப்படும் வதந்தியை உண்மை என்றே ஒரு வாதத்துக்காக எடுத்துக் கொள்வோம். அப்புறம் வீரப்பன் என்னை ஏன் இத்தனை நாட்கள் காட்டுக்குள் அலைக் கழிக்க வேண்டும்?

கேள்வி- காட்டுக்குள் தீவிரவாதி மாறனுடன் என்ன பேசினீர்கள்?

பதில்:- பார்த்தேன்... அவ்வளவுதான். ஒரு வார்த்தைகூட அவருடன் பேச முடியவில்லை. அவரும் என்னுடன் பேசவில்லை.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## தமிழ் பெண்ணை மகனுக்கு மணம் முடித்து வைத்தாராம்

சென்னை, நவ. 20

கேள்வி- வருத்தப்படக் கூடாது. கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிராக நீங்கள் மக்களை தூண்டிவிட்டீர்கள் என்றும் அதற்கு பதிலடியாகத்தான் வீரப்பன் உங்களை கடத்தினான் என்றும் ஒரு பேச்சு இருக்கிறதே?

பதில்:- இது சிலரால் தவறாக கிளப்பிவிடப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஒரு போதும் நான் தமிழர்களுக்கு எதிரானவன் அல்ல. இரண்டு மாநில மக்களுக்கிடையே குழப்பத்தை உருவாக்கி அதில் சுகம் காணவேண்டும் என்று நினைப்பவனும் அல்ல. இரண்டு மாநில மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதற்குத்தான் நான் இனிமேல் பாடுபடப்போகிறேன். அதற்கு முதல் வழிகாட்டியாக இருக்கப்போகிறேன். என் வீட்டுப்பையன் ஒருவனுக்கு ஒரு தமிழ்ப்பெண்ணை திருமணம் செய்து வைப்பதன் மூலம் நல்ல ஆரம்பங்களுக்கு வழிவகுக்கப் போகிறேன். கன்னடியர்களும் தமிழர்களும் இதுவரை இருந்ததைவிட சுமுகமான உறவோடு இனி இருக்கத்தான் போகிறார்கள். இவ்வாறு கூறினார்.

## அமெரிக்காவில் அதிவேக 'புல்லட்'' ரயில்

ஜப்பான், பிரான்சில் அதிவேகத்தில் செல்லும் புல்லட் ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இப்போது



அமெரிக்காவிலும் புல்லட் ரெயில் அறிமுகப்படுத்தப்படுகிறது. தலைநகர் வாஷிங்டனில் இருந்து பாஸ்டனுக்கு இந்த புல்லட் ரெயில் விடப்படுகிறது. அது மணிக்கு 240 கிமீ. வேகத்தில் செல்லும். இதற்கு அக்லா எக்ஸ்பிரஸ் என்று பெயரிட்டு இருக்கின்றனர். டிசம்பர் 11-ந்தேதி முதல் ஓடத்தொடங்கும். இதன்வெள்ளோட்டம் நடந்தது இது அமெரிக்க போக்குவரத்தில் புதிய சகாப்தம் என்று போக்குவரத்து துறை மந்திரி ரொட்னி ஸ்லாடர் கூறினார்.

## வீரப்பனைப்பிடிக்க காட்டுக்குள் படையை அனுப்பக்கூடாது.

பெங்களூர், நவ. 20- சந்தன வீரப்பனிடம் காட்டில் 108 நாட்களாக பணயக் கைதியாக இருந்த கன்னட நடிகர் ராஜ்குமார் விடுலையாகி 6 நாட்கள் கடந்து விட்டன. இப்போது வீரப்பனை பிடிக்க அதிரடிப்படையை காட்டுக்குள் அனுப்புவது பற்றி பரவலாக பேசப்பட்டு வருகிறது.

நெடுமாறன் கோரிக்கை

ராஜ்குமாரை மீட்பதில் முக்கிய பங்கு வகித்த நெடு மாறன், முதலில் அதிரடிப்படையினர் ஏற்கனவே நடத்திய அத்துமீறல் பற்றி விசாரணை நடத்திவரும் சதாசிவம் கமிஷன் விசாரணையை முடிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடும், தவறு செய்தவர்களுக்கு தண்டனையும் அளிக்க வேண்டும். அதை விடுத்து அதிரடிப்படையை இப்போது காட்டுக்குள் அனுப்பினால் ராஜ்குமார் விடு தலைக்குப்பிறகு ஏற்பட்டு உள்ள சுமூகமான சூழ்நிலை கெட்டு விடும் என்று கூறி உள்ளார்.

கர்நாடக போலீஸ் தயார்

ஆனால் கர்நாடக அதிரடிப்படை போலீசார் காட்டுக்குள் செல்வதற்காக தமிழ்நாடு- கர்நாடக எல்லையோரம் உள்ள 17 முகாம்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர். கடந்த ஜூலை 30-ந்தேதி ராஜ்குமார் கடத்தப்பட்ட மறுநாள் முகாம்களில் இருந்து வாபஸ் பெற்ற இந்த அதிரடிப் படையினர் இப்போது மீண்டும் வரவழைக்கப்பட்டு உள்ளனர்.

காத்திருக் கிறார்கள்

அதிரடிப்படை தாக்குதலை தொடங்குவது பற்றி தமிழக அரசின் முடிவுக்காகவும், கர்நாடக அரசின் உத்தரவுக்காகவும், கர்நாடக அதிரடிப்படை காத்திருக்கிறது. உத்தரவு கிடைத்தவுடன் அதிரடிப்படை காட்டுக்குள் நுழைந்து வேட்டையை தொடங்கி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிருஷ்ணா அறிவிப்பு

## ஹோசிமின் சிட்டியில் கிளிண்டன்

ஹோசிமின்சிட்டி, நவ. 20-

தெற்கு வியட்னாமின் தலை நகராக இருந்த சைகோன் இப்போது ஹோசிமின் சிட்டி என்று அழைக்கப்படுகிறது. இந்த நகரத்தில் தான் அமெரிக்கப்படை தங்கி இருந்தது. இங்கு இருந்துதான் வியட்னாம் போரின்போது அமெரிக்கப் படை வாபஸ் ஆனது. சைகோன் நகரம் வீழ்ந்ததைத் தொடர்ந்து, வியட்னாம் யுத்தம் முடிவுக்கு வந்தது. இந்த நகரத்துக்கு கிளிண்டன் நேற்று சென்றார். அவருக்கு அந்த நகரமக்கள் திரளாகக்கூடி வரவேற்பு அளித்தனர். விமான நிலையத்தில் இருந்து நகரின் மையப்பகுதி வரைக்குமான 5 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலை நெடுக மக்கள் இடை வெளி இல்லாமல் திரண்டு நின்று வரவேற்றனர். கிளிண்டன் தங்கி இருக்கும் செண்டிரல் ஓட்டலைச் சுற்றி உள்ள தெருக்களிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக கிளிண்டனைப் பார்ப்பதற்காக கூடி இருந்தனர்.

## இங்கிலாந்து ராணிக்கு கண்டனம் பறவையின் கழுத்தை திருகி கொன்றதற்காக

லண்டன், நவ. 20-

பறவையைப் பிடித்து கழுத்தைத் திருகி கொன்றதாக இங்கிலாந்து ராணி எலிசபெத் மீது குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது. இதற்காக உயிரினங்களின் உரிமைக் குழு ராணிக்கு கண்டனம் தெரிவித்து உள்ளது.

வேட்டை

இங்கிலாந்து அரச குடும்பத்துக்குச் சொந்தமாக நார்போக் என்ற இடத்தில் சாண்ட்ரிங்கம் என்ற எஸ்டேட் உள்ளது.இந்த எஸ்டேட்டில் பறவைகளை வேட்டையாடும் நிகழ்ச்சி நடந்தது. இதில் குண்டு பாய்ந்த நிலையில் கீழே விழுந்து துடித்த பறவையை இங்கிலாந்து ராணியின் லாப்ராடர் நாய் கவ்விக் கொண்டு வந்து 74 வயது ராணியிடம் ஒப்படைத்தது. அதை இங்கிலாந்து ராணி வாங்கி, கழுத்தைத் திருகி கொன்றார்.

கண்டனம்

இதை லண்டன் பத்திரிகைகள் படத்துடன் வெளியிட்டு கொலைகார ராணி (தி கில்லர் குயின்) என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டு இருந்தன.இதைத்தொடர்ந்து உயிரினங்களின் உரிமைக்கான குழுவைச் சேர்ந்தவர்கள் ராணிக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இரக்கம் காட்டி

சிறகு விரித்து பறக்கும் பறவைகளை அரண்மனை விருந்தாளிகள் துப்பாக்கியால்கூட ராணி வெறும் கைகளால் பறவைகளை கொன்றார் இதை ராணியின் கணவர் பிலிப் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு இருந்தன.

உயிருக்கு போராடி துடித்துக் கொண்டிருந்த பறவையை கழுத்தைத் திருகி கொன்றதன் மூலம் பறவை வெகு நேரம் வேதனையால் துடிக்காமல் தடுத்ததன் மூலம் இரக்கம் காட்டி இருக்கிறார் என்று ராணி தரப்பினர் விளக்கம் கூறினர்.

பறவையை வேதனையில் இருந்து ராணி தடுத்தார் என்று கூறப்படுவதை உயிரின உரிமைக் குழுவினர் எதிர்த்து உள்ளனர். பறவையை ஏன் வேதனைக்கு உள்ளாக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டு உள்ளனர்.

## உலகின் மிகப்பெரிய கட்டிடம் தென்கொரியாவில் கட்டப்படுகிறது

சியோல், நவ. 20-

100 கோடி ரூபாய் செலவில் 107 மாடிகளைக் கொண்ட உலகின் மிகப்பெரிய கட்டிடம் தென் கொரியாவில் கட்டப்படுகிறது. உலகின் மிகப்பெரிய கட்டிடமாக சிகாகோ நகரில் உள்ள பிசியர்ஸ் டவர்ஸ்பீ மற்றும் சமீபத் தில் மலேசியா நாட்டில் கோலா லம்பூரில் கட்டப்பட்ட 88 மாடி கட்டிடமான பெட்ரோனாஸ் டவர்ஸ் சிகாகோ டவரைவிட உயரமானது என்ற புகழ் பெற்றது. இது 1,483 அடி உயரம் கொண்டது.இதை விட மிக உயரமான கட்டிடத்தை தென்கொரியாவில் உள்ள பூசான் நகரில் லோட்டே குரூப் என்ற தொழில் நிறுவனம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. 1,524 அடி உயரம் கொண்ட இந்த கட்டிடம் 107 மாடி கொண்டதாக இருக்கும். இதற்கான அடிக்கல் நாட்டு விழா அடுத்த மாதம் டிசம்பர் மாதம் நடக்கிறது. பூமிக்கு கீழே 7 தளங்கள் இருக்கும். இந்தக் கட்டிடத்தில் வணிக வளாகமும், 1,500 அறைகள் கொண்ட ஓட்ட லும், பொழுது போக்கு வசதிகள் கொண்ட மையமும் இருக்கும்.

## ஜப்பான் பிரதமர் மோரி பதவி விலகுவார்

ஆளும் கட்சி செயலாளர் அறிவிப்பு

டோக்கியோ, நவ. 20-

ஜப்பான் நாட்டில் பிரதமர் மோரி மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் இன்று (திங்கட்கிழமை) கொண்டுவரப்படுகிறது. இதற்கு ஆளும் கட்சியில் மோரிக்கு எதிராக உள்ள 2 தலைவர்கள் ஆதரவு தெரிவித்து உள்ளனர். இந்த தீர்மானம் நிறைவேறக் கூடிய சூழ்நிலை எழுந்து உள்ளது. இதைத்தொடர்ந்து மோரி பதவி விலகுவார் என்று அவரது நண்பரும், ஆளும் கட்சியான லிபரல் ஜனநாயகக்கட்சி பொதுச் செயலாளர் கோநாகா தெரிவித்து இருக்கிறார்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க பன்னிரெண்டரை லட்சம் ரூபாய் ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூக சேவை அமைச்சர் நிமால் பெனான்டோ பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விஜயம் செல்ல விருக்கிறார்.

அம்பாறை, மட்டக்களப்பு, பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்தும் பலத்த மழை பெய்கிறது.

### மட்டக்களப்பில் வெள்ளத்துக்கு இரண்டு பேர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வெள்ளத்தினால் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். இக்குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவை வழங்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலநறுவை மாவட்டத்திலும் பலத்த மழை பெய்திருப்பதால் அங்கும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தொகை பத்தாயிரமாக அதிகரித்துள்ளது.

தற்போதைய நிலவரம் குறித்து ஆராய்வதற்காக மட்டக்களப்பு செயலகத்தில் நடந்த கூட்டத்தில் அதிபர் மோனகுருசாமி இதனை தெரிவித்தார்.

பிரதேச செயலக அதிகாரிகள், சமூகசேவை திணைக்கள அதிகாரிகள், சுகாதார திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

### தொற்றுநோய் பரவும் அபாயம்

சகல பிரதேச செயலாளர்களும், சமுர்த்தி உத்தியோகஸ்தர்களும், சமூக சேவை அதிகாரிகளும், தத்தமது பிரதேசங்களில் இருந்து பாதிக்கப்பட்ட மக்களின் சேமநலனை கவனிக்கும் படி அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வெள்ளப்பெருக்கு அபாயங்களினால் தொற்றுநோய் பரவும் அபாயம் அதிகளவில் இருப்பதினால் சுகாதார நலன்களை பேணுவதில் அக்கறை செலுத்துமாறு அவர் அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டு தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு இரண்டு நாளைக்கு சமைத்த உணவினை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவி பணியில் ஈடுபடுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக் கொண்டானில் மூன்று அடிக்கு மேல் நீர் பாய்ந்தோடுவதினால் இதனால் மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் ஒன்று பாதையைவிட்டு விலகி குடைசாய்ந்திருக்கிறது. வீதிப்போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

### அடித்துச் செல்லப்பட்ட மாணவி உயிர் தப்பினார்.

வீச்சுக்கல் முனையில் இருந்து மட்டக்களப்பு பாடசாலைக்கு வந்த மாணவி ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு மீனவர்களினால் காப்பாற்றப்பட்டார். அவர் மட்டக்களப்பு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

அத்துடன் மட்டக்களப்பு பஸ் நிலையமும் நீரில் மூழ்கியிருக்கிறது. இதனால் பஸ் நிலையம் தற்காலிகமாக காந்தி சிலை மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அதே நேரம் அம்பாரை மாவட்டத்திலும் நிலைமை மோசமடைந்துள்ளது. அத்துடன் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இரண்டு நாட்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ளதாகவும், இது நாளை புதன் அன்று மீண்டும் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் தெய்யத்தகண்டியுள்ள 2 பாடசாலைகளில் 100 அகதிகள் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்.

பொத்துவில் பாடசாலையிலுள்ள பாடசாலைகளில் 500 பேர் தஞ்சமடைந்துள்ளனர். கல்முனைத் தமிழ் பிரிவிலும் வெள்ளப்பெருக்கு காரணமாக 750 பேர் பாடசாலை ஒன்றில் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிறிவர்த்தன வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை சென்று பார்வை யிட்டதுடன் அவர்களுக்கு சமைத்த உணவை வழங்குமாறும் உத்தர விட்டுள்ளார்கள்.

சம்மாந்துறை கல் முனைப் பாதையில் மாவடிப்பள்ளி பாதையில் மூன்று அடி உயரத் துக்கு வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. வீதிகளும் போக்குவரத்துத் தடைப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

### மட்டக்களப்பை.......

(2ம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக, வாணிப, முஸ்லிம், விவகார, கப்பல்துறை அமைச்சரும், இணைத் தலைவருமான அல்ஹாக் ரஊப் ஹக்கீம், கல்விப்பிரதி அமைச்சர் ஏ.எல்.அதாவுல்லா, பாராளுமன்ற உறுப்பனரும் மூத்த துணைத் தலைவருமான அல்ஹாக் யு.எல்.எம்.ஹனிபா, முன்னாள் பிரதியமைச்சரும், தற்போதைய வ.கி.நீர் வழங்கல் வடிகால் சபையின் தலைவர் அல்ஹாக் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவும், கலந்து கொண்டதோடு பல முக்கிய தமிழ்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



9வது வடக்கு கிழக்கு தமிழ் இலக்கிய விழா திருகோணமலையில் 17ம் திகதி ஆரம்பமானது. தமிழுக்கு தொண்டாற்றிய அறிஞர்கள் போல் வேடம் தரித்த மாணவ மாணவிகள் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இருந்து கடற்படை தள வீதி வழியாக புனித மரியாள் கல்லூரி விழா மண்டபத்திற்கு செல்வதை படத்தில் காண்கிறீர்கள்

(படம் :- திருகோணமலை நிருபர் எஸ்.எஸ். குமார் )



வடக்கு கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையில் ஆரம்பமானது. விருந்தினர்களும் பேராளர்களும் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இருந்து கடற்படைத்தள வீதியாக விழா மண்டபத்திற்கு (புனித மரியாள் கல்சார்) அழைத்துச் செல்லப்பட்டனர். ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்சா அணியின் தமிழ் அணியினரைத் தொடர்ந்து பிரமுகர்கள் விழா மண்டபத்திற்கு செல்வதைப் படத்தில் காணலாம்.

(படம்: திருமலை நிருபர் எஸ்.எஸ் குமார்)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து மாதிரி மீன் பிடி கிராமங்கள்

(வேதாந்தி)

நீரக வளங்கள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உலக வங்கியின் அனுசரணையுடன் மீன்பிடி அபிவிருத்தி அமைச்சினால் மட்டக் களப்பு மாவட்டத்தின் உன்னிச்சை,நாகம்,கித்துள், மங்கிகட்டு, கோட்டைமுனை ஆகிய இடங்களில் ஐந்து மாதிரி மீன் பிடி கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தினால் அமைச்சர் மகிந்தராஜபக்சவிடம் தேர்தலுக்கு முன்பு கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இவ்வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவர்களுக்கான காசோலைகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமியினால் வழங்கப்படவுள்ளதாக ஜோசப் எம்.பி. தெரிவித்தார்.

## அடுத்த வருடம் 350 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(நமது நிருபர்)

கஷ்டப் பிரதேச மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதல் பிரதேசம் தோறும் இரண்டு பாடசாலைகள் என்ற அடிப்படையில் சுமார் 350 பாடசாலைகள் சகல வசதிகளையும் கொண்டதாக அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பிராந்திய மட்டத்தில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் 134 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு தரம் உயர்த்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒன்று அல்லது இரண்டு பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு கஷ்டப் பிரதேச மாணவர்களின் கல்வி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

கஷ்டப் பிரதேச மாணவர்கள் உயர் கல்வியை பெறும் பொருட்டு போக்குவரத்து மற்றும் இதர பல்வேறுபட்ட கஷ்டங்களை எதிர் நோக்கி நகரப் புற பாடசாலைக்கு செல்ல வேண்டிய பரிதாப நிலையை கருத்தில் கொண்டே கஷ்டப் பிரதேச பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நெற்காணிகள் வெள்ளத்தல் பாதிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலமை காரணமாக பல ஆயிரக்கணக்கான நெல்வயல்கள் வெள்ளத்தால் மூழ்கி உள்ளன.

கரடியனாறு, வந்தாறுமூலை, கிரான், வாழைச்சேனை ஆகிய கமநல கேந்திரநிலையங்களுக்குட்பட்ட நெற் காணிகளே இவ்வாறு வெள்ளத்தால் மூழ்கிக் கிடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# ரமழான் நோன்பு ஆரம்ப தினம் பற்றிய கூட்டம்

(கொழும்பு)

ரமழான் நோன்பு ஆரம்பமாவதை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு பெரியபள்ளி வாசலில் எதிர்வரும் 26ம் திகதி மகரிப் தொழுகையின் பின்னர் மகாநாடு நடைபெறவுள்ளது. உலகமாக்கல், கத்தீப்மார்கள், மற்றும் ஜு"ம்மா பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அகில இலங்கை ஜம்பியத்துல் உலமாவின் உறுப்பினர்கள் முஸ்லிம் சமய விவகார அமைச்சின் அதிகாரிகள் இதில் கலந்து கொள்வார்கள்.

நோன்பு ஆரம்பமாவதை குறிக்கும் வகையில் பிறை தென்பட்டால் கொழும்பு பெரிய பள்ளி வாயலுக்கு அறிவிக்குமாறு அதன் பொதுச் செயலாளர் எம்.சாஹீல் கமித் முஹைதீன் கேட்டுள்ளார். பிறை தென்பட்டால்- தொலைபேசி இலக்கம் 432110, 434651, 077759799, 077305296 ஆகிய எண்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

# அம்பாறை மாவட்ட கரையோரப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள அபாயம்

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் அம் மாவட்டத்தின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது. மாவடிப்பள்ளி, கிட்டங்கி ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் அவ்வீதிகளில் பயணம் மேற்கொள்ள முடியா தவாறு வீதிகளுக்கு குறுக்கே வெள்ளம் பாய்ந்தோடுகிறது. இதன் காரணமாக சவளக்கடை, 04ஆம் கிராமம், மண்டூர், மத்திய முகாம் போன்ற பகுதிகளுக்குரிய போக்கு வரத்து சேவைகளும் ஸ்தம்பித மடைந்து அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். சிட்டங்கி வீதியில் பாய்ந்தோடும் வெள்ளத்தில் சல்பீனியா ( ஆற்று வாழை) வும் சேர்ந்து வீதியை மூடி யுள்ளதால் அப்பகுதிகளில் காணப்படும் வயல் நிலங்களுக்குச் செல்ல வேண்டிய நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு கல்முனைப் பகுதி விவசாயிகள் தங்களது வயல் நிலங்களுக்குச் செல்ல முடியாதுள்ளனர். அனேகமான வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியும், உடைப்புக்கள் ஏற்பட் டும் உள்ளதாக விவசாயிகள் தெரி விக்கின்றனர். இதே வேளை இவ் மழை இன்னும் சில தினங்களுக் குத் தொடங்குமாயின் மணல் சேனை, நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு பகுதி தாழ்ந்த நிலப் பிரதேசத்தில் வாழும் 50ற்கு மேற்பட்ட குடும்பங்கள் அகதி களாக இடம் பெயரும் நிலைக் குறுபட்டுள்ளது.


## கல்முனை பிரதேசத்தில் பல வீதிகள் வெள்ளத்தில்

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனைப் பிரதேசத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் வெள்ளம் ஏற்படும் அபாயமும் தோன்றியுள்ளது. கல்முனை பிரதான வீதிக்கருகாமையில் அமைந்துள்ள ஹிஸ்ரா வீதியும் நீரில் மூழ்கியுள்ளதால் பல நோக்கு கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள வங்கி, கரியாலயங்களுக்கு வரும் அதிகாரிகளும், ஊழியர்களும், பொதுமக்களும் பெரும். சிரமத்திற்குள்ளாகின்றனர். 400 மீற்றர் நீளமான ஹிஜ்ரா வீதி திருத்தப்பட வேண்டுமென்று பொது நல அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படாதது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி திருத்த விடயமாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளரோடு தொடர்பு கொண்டபோது 400 மீற்றர் நீளமான வீதி சுமார் இருலட்ச ரூபா நிதியில் திருத்தப்படக்கூடியது இருந்தும் இவ்வீதி திருத்தப்பணி கல்முனை நகர சபைக்குரியது என வேதனையுடன் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் வெள்ளக் கொடுமைகள்



கல்லடியில் வீட்டு வாசல் வரை வந்த வெள்ளத்தில் பா குமுலம் வந்திறங்கும் வீட்டுக்காரர்.



கல்லடியில் தேவாலயத்தை சூழ்ந்து நிற்கும் வெள்ளம்.



கட்டுமரத்தில் வீட்டிலிருந்து வெள்ளத்திலிருந்து வெளியேறும் ஒரு குடும்பம் கல்லடியில்



மட்டு/ பேருந்து நிலையத்தின் பின்பக்கத்தோற்றம்



மட்டக்களப்பு நகர் பூங்காவுக்கும் போருந்து நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதி




மட்டக்களப்பு பேருந்து நிலையப் பகுதி



வாவிக்கரை வீதி. ஒரு பகுதி நீரில் மூழ்கிய நிலையில்



மட்டு- திருகோணமலை பிரதான வீதியினூடு சத்துருக்கொண்டான் பகுதியில் ஐ.சி.ஆர்.சி.வாகனம் மட்டுமே பயணித்தது.



வெள்ளத்தில் நீந்திச் செல்லும் வாகனங்கள.

## படையினர் சுற்றிவளைப்பு

(நமது நிருபர்)

ஏறாவூர் பற்றுபிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல கிராமங்கள் நேற்று முன்தினம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

ஐயங்கேணி தளவாய் களுவங்கெணி பலாச்சோலை ஆகிய கடலோரக் கிராமங்களே இவ்வாறு தேடுதல் நடாத்தப்பட்டது.

இராணுவம், பொலிஸ், அதிரடிப்படையினர் கூட்டாக் மேற்கொண்ட இத்தேடுதல் காலை தொடக்கம் மாலை வரை நீடித்தது. இத்தேடுதலில் பலர் தீவிரவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## சிறுவர் பாதுகாப்பு கருத்தரங்கு

(எஸ். எஸ். குமார்)

திருகோணமலை. சர்வோதய நிலையத்தின் ஏற்பாட்டில் சிறுவர் காதுகாப்பு கருத்தரங்கு ஒன்று நேற்று 20ம் திகதி நடைபெற்றது. இம் மாவட்டத்தில் பணிபுரியும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள அடங்கிய 50 பேருக்கு இது பற்றிய அறிவூட்டல் வழங்கப்பட்டது. திருகோணமலை கோட்டை வீதியில் அமைந்துள்ள பௌத்தயாத்திரீகள் விடுதியில் காலை 9. 00 மணி தொடக்கி 4. 00 மணிவரை இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இதுபோல் மற்றுமொரு கருத்தரங்கு உலக கனடிய பல்கலைக்கழக சேவை நிறுவனம் இன்று 21ம் திகதி பதிய சில்வர் ஸ்டார் உல்லாச விடுதியில் ஏற்பாடு செய்துள்ளது.

*ஓமந்தையில்*

# ஒரு அதிகாரி உட்பட ஏழு இராணுவத்தினரை காணவில்லை படையினர் தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் படையினர் நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் ஒரு அதிகாரி உட்பட 7 இராணுவத்தினர் காணாமல் போய் உள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நடவடிக்கையில் 4 விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை யாழ். வடமராட்சி கிழக்குக் குடத்தனை பகுதியில் நேற்று, வெள்ளிக்கிழமை இரவு 10 மணிதொடக்கம் சுமார் ஒரு மணிநேரமாக படையினர் எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என ஊர்வாசிகள் தெரிவிக்கின்றனர். இதனால் பெரும் தாக்குதல் நடைபெறுவதாக எண்ணி பொது மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்து இரவைக் கழித்துவிட்டு நேற்று சனிக்கிழமை காலையில் தமது வீடுகளுக்குத் திரும்பினர்.

இது தொடர்பாக யாழ். படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது மணற்காட்டிலுள்ள கடற்படையினரும் குடத்தனையிலுள்ள படையினரும் பயிற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவித்தனர்.

ஆனால் அப்பகுதியிலுள்ள மக்கள் தாக்குதல் நடைபெறுவதாக தமது வீடுகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்து. இரவைக் கழித்துவிட்டு நேற்று சனிக்கிழமை காலையில் தமது வீடுகளுக்குத் திரும்பியதாக அங்கிருந்து வந்த கிராமவாசியொருவர் தமிழ்நெட்டுக்குத் தெரிவித்தார்.

# சந்திவெளியில் இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சந்திவெளியில் இளைஞர் ஒருவர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவரின் சடலத்தை படையினர் எடுத்துச் சென்று முறக்கொட்டாஞ்சேனை படைமுகாமில் வைத்துள்ளனர். இவர் விடுதலைப்புலி உறுப்பினரென படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்காக 29 கி.மீற்றர் தூரத்தில் சந்திவெளிக் கிராமம் உள்ளது.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது. சந்திவெளி புகையிரதப்பாதை ஓரமாக மறைந்திருந்த படையினர் அவ்வழியாகச் சென்ற இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இவர்களில் ஒருவர் பலியானதுடன் மற்றவர் தப்பிச் சென்றுவிட்டதாகவும் படையினர் தெரிவித்தனர்.

தப்பிச் சென்றவர் தங்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டு ஓடியதாகவும் எனினும் தமது தரப்பில் எவ்விதசேதமும் ஏற்படவில்லையென படையினர் மேலும் தெரிவித்தனர்.



அம்பாறை மாவட்ட தொழிலாளர் தொழிற்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சமீபத்தில் நிந்தவூரில் நடைபெற்ற போது அம்பாறை சதொச கிளை காசாளர் எஸ்எம்.எம்.ஹாறூன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

(படமும் தகவலும் :- மருதமுனை ஹரீஷா)

# போசாக்கின்மையினால் சிறுவர் பாதிப்பு

(நமது நிருபர்)

துணுக்காய் பிரதேசம் தெண்ணியன்குளம் உயிலங்குளம் கிராமங்களில் வாழும் சிறார்களில் 50 வீதமானவர்கள் போசாக் கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒக்ஸ்பாம் நிறுவன அனுசரணையுடன் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது 50 வீதமான சிறார்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளமை அறியப்பட்டுள்ளது.

உயிலங்குளம் தெண்ணியன்குளம் பகுதிகளில் 268 குடும்பங்களை சேர்ந்த 1123 பேர் வாழ்கின்றனர். இவர்களில் 50 வீதமான சிறார்கள் போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# பீற்றர்ஹேறன் கூட்டணியை சந்தித்து பேசுவார்

(வேதாந்தி)

பிரித்தானிய இராஜங்க பொது நல விவகாரங்கள் அமைச்சர் பீற்றர்ஹேறன் இம்மாதம் 21ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இவர் 22ந்திகதி புதன்கிழமை பி.ப 3.15 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம் ஆகியோர்களைச் சந்தித்து வடக்கு கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து பேசவுள்ளார். அதற்கான அழைப்பினை இலங்கையில் தூதுவர் லிண்டாடபீல் கடிதம் மூலம் விடுத்துள்ளார்.

# நோர்வே தவிர வேறு நாடு தலையிட முடியாது

## இந்து பத்திரிகைக்கு லக்ஷ்மன் கதிர்காமர் பேட்டி

(கொழும்பு)

நோர்வே அரசு தவிர்ந்த வேறு எந்த ஒரு நாடும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக தலையிட இடமில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இந்து பத்திரிகைக்கு வழங்கிய விஷேட பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது.

விடுதலைப்புலிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு எது வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என நோர்வே தெரிவித்துள்ளது.

இதேவேளை புலிகள் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ் நிலை சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா தற்போது தலையிடாவிட்டாலும் நிலமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

(சே.பங்கயற்செல்வன்)

சுகாதார திணைக்களம், மாநகரசபை,உள்ளுராட்சி திணைக்களம்,மட்டக்களப்பு றோட்டரிக் கழகம் என்பவற்றுடன் இணைந்து மட்டக்களப்பு றோட்டரிக் கழகம் நடாத்தும் டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஊர்வலம் நேற்று மு.ப.11.45 மணியளவில் காத்தான்குடி நகரத்தினுள் வந்தது இவ்வூர்வலத்தில் றோட்டரிக் கழக உறுப்பினர்கள் மட்- காத்தான்குடி வைத்தியர்கள் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் டெங்கு காய்சலுக்கு உரிய நிவாரண முறைகளையும் இக் காய்ச்சல் ஏற்படாத வண்ணம் தடுப்பதற்கு உரிய வழிமுறை களையும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிட்டனர்.

# "லக் ஹண்ட" ஒலிபரப்பு சேவையின்

## சிறந்த செய்தியாளர் தெரிவு

(ஏறாவூர் நிருபர்)

ஐ.ரி.என். சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் சகோதர வானொலி சேவையான 'லக் ஹண்ட'சிங்கள மொழி மூல ஒலிபரப்பு சேவையின் 2000 ஆண்டிற்கான பிராந்திய முன்னணி செய்தியாளராக ஏறாவூரை சேர்ந்த கௌஸ்-ஏ.நாஷர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

"லக்ஹண்ட" வானொலி நிறுவனத்தின் வருட பூர்த்தியை முன்னிட்டு நாலாவது தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் பிரகாரம் இத்தெரிவு இடம் பெற்றது.

கொழும்பில் இருந்து வெளியிடப்படும் மும்மொழி மூல பத்திரிகையின் உள்நாட்டு, வெளிநாட்டு இலத்திரனியல் ஊடகங்கள் அத்தோடு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்து வெளிவரும் பிராந்திய செய்தி பத்திரிக்கைகளுக்குமான சுயாதீன செய்தியாளராக கடந்த எட்டு வருடமாக பணியாற்றுகிறார்.

பரிசளிப்பு மற்றும் பாராட்டு வைபவத்தில் தகவல் துறை அமைச்சர் அனுராபிரிய தர்ஷன யாப்பா பிரதம அதிதியாகவும் அலிசாஹிர் எம்.பி சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்வர்.

# ஜனாதிபதி விருதுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 பேர் தெரிவு

(துஷி)

இவ் ஆண்டிற்கான சமுர்த்தி கௌரவிப்பு விழாவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 பேருக்கு ஜனாதிபதி விருது வழங்கப்படவுள்ளது.

இப்பதினொரு பேர்களில் ஆரையம்பதி மண் முனைப்பற்று பிரதேச செயலகத்தில் சிறந்த தலமையக முகாமையாளர் திருமதி எஸ். புவிச்சந்திரன், ஆரையம்பதி வடக்கு சிறந்த சமுர்த்தி சமூக கருத்திட்ட (இளம் ஞாயிறு) சமுர்த்தி செயலணி தலைவர் ஆகிய இருவருக்கும் ஜனாதிபதி விருது வழங்கப்படவுள்ளதாக சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

# இறந்தவர் கண்கள் எங்கே?

(யாழ் நிருபர்)

யாழ்வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாக மரணமடைந்த ஒருவருடைய கண்கள் இரண்டினை அவரது முன் அனுமதி இன்றி சட்டவிரோதமாக எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

தாவடியைச் சேர்ந்த ஜெயராசசிங்கம்(68) என்பவருடைய கண்களே எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கொட்டில் வசதியின்றி கொட்டும் மழையில் மாணவர் அவதி

(வவுனியா நிருபர்)

வவுனியா பூந்தோட்ட அரசினர் கலவன் பாடசாலையில் மாணவர்கள் கட்டிட வசதியின்றி தரையில் அமர்ந்து பரீட்சை எழுதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.சுமார் 2000 மாணவர்கள் கல்வி பணியிலும் மேற்படி பாடசாலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தற்காலிகமாக கொட்டில் வசதியின்றி கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பாடசாலையின் கட்டிட வசதியை பூர்த்தி செய்யும் வகையில் கடந்த ஆறாம் மாதம் நிரந்தர கட்டிடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் இதுவரை கட்டிடத்திற்கான அடிக்கல் கூட நடப்படவில்லை. என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

# கடன் பணத்தைக் கேட்கச்சென்ற சிறுமி மீது பாலியல்வல்லுறவு

(சே.பங்கயற் செல்வன்)

கடன் பணத்தைக் கேட்கச் சென்ற 5வயது சிறுமியை பாலியல் வல்லுறவு செய்த சம்பவம் அண்மையில் ஓட்டமாவடியில் நிகழ்ந்தது.

குறித்த சிறுமி தமது வீட்டார் கொடுத்த கடன் பணத்தை திருப்பி பெறுவதற்காக மடுத்தம்பி என்பவரின் வீட்டிற்கு சென்றவேளை வீட்டுக் காரரான குறித்த சந்தேக நபர்(27) அச் சிறுமியை பாலியல் வல்லுற வுக்குட்படுத்தியுள்ளார். பாதிப்படைந்த சிறுமி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக சிறுமியின் பெற்றோர் ஏறாவூர் பொலிஸிடமும் மற்றும் மனித உரிமை அமைப்பிடமும் முறையிட்டிருக்கிறார்கள். மேற்படி சந்தேகநபர் தலைமறைவாகி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சந்தேக நபர் இரு பெண் பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுணதீவு போக்குவரத்தை சீர்செய்ய மக்கள் வேண்டுகோள்

(அரியம்)

வவுணதீவு பாலத்திற்கு சமீபமாக உள்ள களிமடு மதகு சேதமடைந்துள்ளதைத் தொடர்ந்து மட்டுநகர் வவுணதீவுப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இம்மதகு சேதமடைந்ததைத் தொடர்ந்து கரவெட்டி, கொக்கட்டிச் சோலை, மணலப்பிட்டி ஆகிய இடங்களுக்கான பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மதகினை திருத்தியமைத்து போக்குவரத்து சேவையினை சீர்செய்யுமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மலையக மக்களுக்கு தனியான அடையாள அட்டை

(கொழும்பு)

இரண்டாவது மகா யுத்தத்தின் போது ஹிட்லர் தனியான அடையாள அட்டை வழங்கி இருந்தார். இதேபோன்று தென்னாபிரிக்க அரசு கறுப்பினத்தவர்களுக்கு தனியான அடையாள அட்டை வழங்கியிருந்தது.

இதேபோன்று இலங்கை அரசு மலையக மக்களுக்கு தனியான அடையாள அட்டை வழங்க முயற்சி மேற்கொள்கிறது என லங்காசமாசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரெத்தின தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர் காலத்தில் தேசிய இனங்களுக்கு இலங்கை அரசு தனியான அடையாளஅட்டை வழங்க முன் வரலாம் எனத் தெரிவித்தார்.

# விளையாட்டுச் செய்திகள்



சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் அண்மையில் இடம் பெற்ற சாரணர் பாசறையின் போது உதவி மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெப்பை பத்தாயிரம் ரூபா பெறுமதியுடைய கூடாரம் ஒன்றை அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத்துக்கு அன்பளிப்பு செய்த போது எடுக்கப்பட்ட படம். படத்தில் உதவி மாவட்ட ஆணையாளரும், விரிவுரையாளருமான எம்.ஐ.எம்.முஸ்தபா, சவுதி அரேபிய சாரணிய தலைவர் டாக்டர் அக்பர் ஹலால்தீன்,

(படம்-முபா)

## புலமைப்பரிசில் பரீட்சையில்



மட் / ஆரையம்பதி இராம கிருஸ்ணமிஷன் மகாவித்தியாலய மாணவன் விஜயராஜ் ரமேந்திரன் 137 புள்ளி பெற்று சித்தியடைந்துள்ளார்.

# பிறந்த திகதி தரும்யோகம்.

## ஜோதிடம் -ஆகஸ்ட- 06

ஆகஸ்ட் மாதம் 6-15-24ம் தேதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்:-

பாசப்பிணைப்புடையவர்கள். இரக்கமனப்பான்மையும் கொண்டவர்கள். காதல் வசப்படுபவர்கள். அனைவரையும் கவர்ந்திடும் சக்தியுடையவர்கள். "காதல் இன்றேல் சாதல்" என்று கூட சில சமயங்களில் நினைப்பவர்கள். "செக்ஸ்" உணர்வுகள் அதிகமே. குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதில் தீவிர ஆசை கொண்டவர்கள். நண்பர்களும் அதிகமே. நட்பிற்காக எதையும் இழக்கவும் தயாராக இருப்பீர்கள்.

சினிமா, நாடகம், தொலைக்காட்சி இவைகளில் நடிகர், நடிகையாக பேரும் புகழும் பெறும் நிலையும் சிலருக்கு அமையும். சிறந்த நடன ஆசிரியையாகவும் புகழ் பெறலாம். கவிதை, இசைத் துறையில் சிறப்படையலாம். எப்பொழுதும் ரசிகர்கள் கூட்டம் சூழ்ந்திருக்கும். இளமையுடன் இருக்கவே விரும்புவர். நல்லவர்களின் துணையும் இருக்கும். உங்கள் முன்னேற்றத்தை பார்த்து பொறாமைப்படுபவர்களால் தொல்லையும் உண்டு. எந்தத் தொழிலில் இருந்தாலும் வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கும் யோகமும், உயர்நிலையும் பெறும் அதிர்ஷ்டசாலிகளே. சூரியனும் சிம்மராசியில் ஆட்சி பலம் பெற்றிருப்பது சுக்கிர ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு ரரியோகம் அமையும் அமைப்பாகும்.

யோசித்து முடிவுக்கு வராமல் எந்தக் காரியத்திலும் இறங்கமாட்டார்கள். தோல்வியால் சோர்வடையமாட்டார்கள். அசுரத் தன்மையுடன் மேலும் மேலும் தீவிரமாக முயற்சிப்பார்கள். 'உலக வாழ்க்கை நித்தியம்'. அதில், தான் நல்ல பதவியடைய வேண்டியது மிகவும் முக்கியம் என்று நினைப்பது போலத் தோன்றும் இவர்களது வாழ்க்கை. வசிகரமான தோற்றமும் விடா முயற்சியும் தன்காரியத்திலே கண்ணாயிருக்கும் தன்மையும் உடைய இவர்கள் செல்வமும் செல்வாக்கும் பொருந்தினவராக வாழ்வதில் வியப்பொன்றுமில்லை.

குறிப்பிடலாம்.

நல்ல உடல் நலம் கொண்டவர்கள். பிற்காலத்தில் இருதய நோய், காலில் வலி ஏற்படும்.

1-4-6-10-13-15-19-22-24-28-31ம் தேதிகள் எந்த ஆண்டு மாதமானாலும் யோகம் தரும். 1-6-10-15-19-24-28-33-37-42-46-51-55-60-64-69ம் வயதுகளில் வாழ்க்கையில் நினைவில் நிற்கக் கூடிய சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கூட்டு எண் 1-3-4-6ஆக வரும் நபர்களுடன் ஏற்படும் நட்பும், துணையும் என்றும் நல்லுறவும் நன்மையும் தரும்.

வர்ணம்:- ஆழ்ந்த பச்சை, ஆழ்ந்த நீலம், மற்றும் நீலம், பச்சை,சிவப்பு கலந்த வர்ணங்கள் அதிர்ஷ்டமானவை.

இரத்தினம்:- மரகதம் **EMERALD** மரகதம் மென்மையானது இதைக் கண்ணாடிப் பாத்திரத்தில் பாலை ஊற்றி அதில் மரகதத்தைப்போட்டால் பால் முழுவதும் பச்சை நிறமாகத் தோன்றும். நீரிலே போட்டாலும் பச்சையாகத் தோன்றும். இப்படிப்பட்ட குணமுடைய கல் விலை உயர்ந்ததாகும். இது பச்சை கிளிக்குஞ்சின் இறகு, புதிய பசும்பல் போன்றவைகளின் நிறத்தை ஒத்தது.

சிலிக்கா, அலுமினியா, சோடா, மக்னீஸ் போன்ற ரசாயணக்கலவை ஒப்படர்த்தி 2.73 கடினத்தன்மை 7.5

மிக மிக அதிர்ஷ்டமானது மரகதம்(பச்சை) இருதய வலிமையும், சந்தோஷமும், அதிர்ஷ்டமும் இக்கல் அணிவதால் ஏற்படும்.

வயிற்று நோய் உடையவர்கள் ஜேட்(JADE) அணியலாம்.

டர்குவாய்ஸ் கூட(TUR QUOISE) நன்மை தருவதாகும். அதில் பரஸ்பர சத்து இருப்பதால் மூளைக்குத் தெளிவு ஏற்படும்.

**வே. தவராசா**

# சிரமதானம்

ஆரையம்பதி இளம் தென்றல் விளையாட்டுக் கழகத்தினர் நாளை வெள்ளிக் கிழமை அன்று ஆரையம்பதி -02 மாரியம்மன் கோயில் வீதியில் அமைந்துள்ள வடிகாலினை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யவுள்ளனர். இச்சிரமதானத்தின் நோக்கம் டெங்கு பரவுவதை தடுப்பதேயாகும் என

# நற்பிட்டிமுனை "தினக்கதிர்" வாசகர் வட்டம்

அமைப்பாளர்: ஜனாப்.நளீம். எம்.பதூர்தீன்-வலயக்கல்வி அலுவலகம்,கல்முனை.

## காப்பாளர்களும் ஆலோசகர் குழுவும்

1. ஜனாப்.எம்.ஐ.அஸீஸ் (சட்டத்தரணி)
2. ஜனாப்.ஏ.அப்துல் கபூர்(பிரதி அதிபரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொள்கை பரப்பு செயலாளரும்)
3. ஜனாப்.எஸ்.அஸ்ஸுல்லா (களஞ்சிய காப்பாளர்)
4. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜெரீன்(பொது சுகாதார பரிசோதகர்)
5. ஜனாப்.எஸ்.எல்.ஜமால்தீன் (தலைவர், ஜும்மா பள்ளிவாசல், நற்பிட்டிமுனை)

1. தலைவர்-ஜனாப்.ஏ.எஸ்.எம்.முஜாஹித் (நற்பிட்டிமுனை நிருபர்)
2. உபதலைவர்-ஜனாப்.எம்.எல்.சமீர்(ஆசிரியர்)
3. செயலாளர்-ஜனாப்.எஸ்.சிராஜுதீன் (ஆசிரியரும், பத்திரிகையாளரும்)
4. உபசெயலாளர்-ஜனாப்.எம்.எம்.நியாஸ்
5. பொருளாளர்-ஜனாப்.எம்.ஐ.யாகூப்

## செயற்குழு உறுப்பினர்கள்

1. ஜனாப்.காதர் எம்.தௌபீக்
2. செல்வி.ரீ.அஸ்மியா
3. ஜனாப்.ஏ.ஜீ.எம்.கிஷோர்
4. செல்வி.ஐ.ஹப்ஸா
5. செல்வி.யூ.எல்.சுஹாறா
6. ஜனாப்.ஏ.எம்.பரீட்
7. செல்வி.ஐ.எல்.ஜுமையா
8. ஜனாப்.ஏ.எல்.எம்.உவைஸ்

நற்பிட்டிமுனை தினக்கதிர் வாசகர் வட்டம் கமு/நற்பிட்டிமுனை அல்-அக்ஷா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தின் போது ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டது.

# வாசகர் நெஞ்சம்

## கூட்டுறவுக்கடையில் ஒழுங்கில்லை!

வந்தாறுமூலை கூட்டுறவுக்கடையில் ஒழுங்கான நிர்வாகம் இல்லை.இதனை பொது மக்கள் கவனத்தில் கொண்டபோதும் தலைமைத்துவம் இல்லாத காரணத்தினால் இது வரை இவ்விடயம் கவனத்தில் கொள்ளப்படாமல் உள்ளது.வறுமை நிவாரணப் புள்ளிக்கு அரிசி மட்டுமே வழங்கப்படுவதுடன் ஒரு கொத்து அரிசியின் விலை கணக்கிடும் போது 40 ரூபாவுக்கு மேல் முடிகின்றது. இதனை தடுக்கும் முகமாகவும் வறுமை நிவாரணம் பெறுவோர் விரும்பும் பொருட்களை எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் உரியவர்களைக் கேட்டுக் கொள்வதுடன், இடைக்கிடையே கடை திறப்பதனால் சன நெரிசல்களும் கூடிக் காணப்படுகிறது. இதனால் கூட்டுறவுக்கடையை ஞாயிறு தவிர்ந்த நாட்களில் திறக்குமாறும் பொதுமக்களின் நலனை மையமாகக் கொண்டு இதனை கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*ம.சுகந்தி*
*வந்தாறுமூலை*

## கல்முனை வீதிகளில் வெள்ளம்

(முபா)

கல்முனைப் பகுதியில் பெய்யும் கடும் மழை காரணமாக வீதிகள் வெள்ளத்தினால் நிரம்பிக் காட்சியளிக்கின்றன. மேலும் பொது மக்கள் வீதிகளில் போடும் குப்பைகள் வெள்ளத்தினால் நாற்றம் எடுக்கின்றன. இதன் காரணமாக பொது மக்கள் வீதிகளில் நடமாட முடியாது கஸ்டப்படுகின்றனர்.நாட்டில் தற்போது பரவலாகப் பரவி வரும் டெங்கு நோய் இங்கும் பரவி விடுமோ என பொது மக்கள் அஞ்சுகின்றனர். [illegible] குப்பைகளை ஒழுங்காக கிரமமாக அகற்றுவதும் இல்லை. நோய் வந்ததன் பின் இதைப்பற்றி சொல்வதை விட நோய் வரும் முன் உரிய நடவடிக்கைகளை எடுப்பது சிறந்தது.

## சுற்று மதில் இல்லாத தொழில் பயிற்சி நிறுவனம்!

((அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராமியத் தொழிற்பயிற்சி நிறுவனம் பாலமுனையில் சிறந்த முறையில் செயற்பட்டு வருகிறது. பல பயிற்சி நெறிகள் கற்பிக்கப்பட்டுவரும் இந்நிறுவனத்தின் பெறுமதி மிக்க பல பொருட்கள் இருக்கின்றன.இருந்த போதிலும் இந்நிறுவனத்தினைச் சுற்றி சுற்று மதில், இரவு நேர காவலாளர் இல்லாமையினால் அடிக்கடி சிறு சேதங்கள் இழைக்கப்பட்டு வருகின்றன. நாளடைவில் பெறுமதிமிக்க பொருட்களும் களவாடப்பட்டு விடலாம் என நிலையப் பொறுப்பதிகாரி மாஹிர் கவலை கொள்கிறார். கவனிப்பார்களா?



(படம் ஒன்று) அண்மையில் மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி வடக்கு சமுர்த்தி பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட சமுர்த்தி விற்பனை நிலையத்தை மேலதிக அரசாங்க அதிபர் நாடாவினை வெட்டித் திறந்து வைப்பதனையும் (படம் இரண்டில்) அரசாங்க அதிபர் விற்பனையை ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் பிரதேச செயலாளர் உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தரையும் படத்தில் காணலாம்.

**(படம்:- க.கணேசதாஸ்)**

# மட்டக்களப்பில் இருந்து படுவான்கரைப் பிரதேசம் முற்றாகத் துண்டிப்பு
# பரீட்சைக்கு சமுகமளிக்க முடியாது மாணவர்கள் தவிப்பு!

(மட்டக்களப்பு)

**நேற்று 3ம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகியபோதிலும் மாணவர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டது. பரீட்சைகளை பின்போடுவது தொடர்பாக முடிவு எடுக்ககூடிய கல்வித்திணைக்கள அதிகாரிகள் எவருடனும் தொடர்பு கொள்ளமுடியாமல் இருப்பதாக பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.**

கல்விப்பணிப்பாளர் கொழும்புக்கு சென்று விட்டதாகவும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரி களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு நகருக்கு மேற்காக இருக்கும் வலையிறவுப் பாலத்திற்கு மேலாக 4அடிக்கு மேல் வெள்ளம் பாய்கிறது. இதனால் படுவான் கரைப் பிரதேசத்துடனான தொடர்புகள் முற்றாக துண்டிக்கப் பட்டிருக்கிறது. படுவான்கரை கிராமங்களிலிருந்து வலையிறவு ஊடாக மக்கள் எவரும் நேற்று மட்டக்களப்பு நகருக்கு வரவில்லை. மண்முனைமேற்கு பிரதேச செயலகம் உட்பட அப்பகுதியில் உள்ள அரச திணைக்களங்கள், பாடசாலைகள் எவற்றிற்கும் மட்டக்களப்பு நகரிலிருந்து அதிகாரிகளும், ஊழியர்களும் செல்லமுடியாததால் அந்த அலுவலகங்களும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அங்குள்ள பாடசாலைகளுக்கும் அதிகமான ஆசிரியர்கள் மட்டக் களப்பு நகரிலிருந்தே செல்வதால் அப்பாடசாலைகள் இன்று இயங்கமுடியாமல் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## சந்தி வெளியில் பலியான இளைஞனின் உடலில்
## சிகரட் சூட்டுக் காயம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு சித்தாண்டியை அடுத்துள்ள பாலையடித் தோணா கிராமத்தில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞரின் மரணம் கொலை என தீர்ப்பளித்த திடீர் மரணவிசாரணை அதிகாரி பி. வீரக்குட்டி இக்கொலை தொடர்பாக பூரணவிசாரணை நடத்தி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஏறாவூர் பொலிஸாருக்கு நேற்று உத்தர விட்டார்.

கடந்த சனிக்கிழமை பாலையடித்தோணா கடற்கரைப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட கிண்ணையடி வாசியான நடராசா செந்தூரன் (17வயது) என்ற இளைஞரின் மரண விசாரணைகள் நேற்று ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி பி. வீரக்குட்டி முன்னிலையில் நடைபெற்றது.

பிரேதபரிசோதனையை ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலை அதிகாரி டாக்டர் கே.சுகுமார் நடத்தினார். துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணம் சம்பவித்திருந்தாலும், உடலில் சிகரட் நெருப்பால் சுட்ட காயங்கள் காணப்படுவதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

சித்தாண்டி இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவ கோப்ரல் குலசூரிய ஜோசப் பெனாண்டோ சாட்சியமளிக்கையில் சம்பவதினம் தானும் மேலும் சில படையினரும் மறைந்திருந்தபோது அவ்வழியால் இரு இளைஞர்கள் வந்ததாகவும், நிற்குமாறு கூறியும் அவர்கள் நிற்காமல் ஓடியதால் அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததாக தெரிவி த்தார்.

பின்னர் அந்த பகுதியில் இந்த இளைஞரின் சடலமும், கிரனைட் ஒன்றும் காணப்பட்டதாகவும் இவர் விடுதலைப்புலி இயக்க உறுப்பினர் என்றும் அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

செந்தூரன் என்ற இந்த இளைஞர் கறுவாக்கேணி வித்தியாலயத்தில் கல்விகற்றுவிட்டு வேலை தேடிக்கொண்டிருந்தவர் என்றும் சம்பவ தினம் வேலை விடயமாக சித்தாண்டியில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டிற்கு சென்ற சமயமே இச்சம்பவம் நிகழ்ந்துள் ளதாகவும் பெற்றோர் தெரிவித்து ள்ளனர்.

சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

## கொம்மாதுறை இளைஞரைக்காணவில்லை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு கொம்மாதுறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் நேசராசா (22) கடந்த 18ம் திகதி தொடக்கம் காணவில்லை என உறவினர்கள் ஐ.சி.ஆர்.சியிடம் முறையிட்டுள்ளனர்.

தச்சுத்தொழிலாழியான மேற்படி இளைஞர் முறக்கொட்டாஞ்சேணைக்கு சென்ற போதே காணாமல் போனதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இவரது சகோதரரும் முள்ளார். படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டக்களப்பு மாவட்.......

1ம் பக்கத் தொடர்ச்சி

சேவைகளும் துண்டிக்கப்பட்டிருக் கிறது. மட்டக்களப்பு கொழும்பு வீதியில் சத்துருக்கொண்டானில் 3அடிக்கு மேல் வெள்ளம் பாய்வதால் மக்கள் மயப்படுத்தப் பட்ட பஸ் ஒன்று வீதியை விட்டு விலகியதால் குடைசாய்ந்தி ருக்கிறது. இதனால் இவ்வீதி போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டிரு கிறது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பல வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதாக மட்டக்களப்பு அம்பாறை வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் எஸ். நவரத்தினம் தெரிவித்தார். காரைதீவு அம்பாறை வீதியில் மாவடிப்பள்ளியில் மூன்றரையடி நீர் பாய்கிறது. மட்டக்களப்புகொழும்பு வீதியில் சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, சித்தாண்டி, ஆகிய இடங்களில் வெள்ளம் பாய்வதாக அவர் சொன்னார்.

### உயர்ந்து வரும் வாவியின் நீர்மட்டம்

மட்டக்களப்பு வாவியின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் வாவியை அண்டிய வீதிகள் முற்றாகநீரில் மூழ்கியுள்ளன. கடல் கொந்தளிப்பு காரணமாக வாவி நீர் கடலுக்கு செல்வது தடைப்பட்டிருப் பதாலேயே வாவியின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாக பெருந் தெருக்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் நவரத்தினம் கூறுகிறார். மட்டக்களப்பு விமானநிலைய வீதி, வீச்சுக்கல் முனை வீதி ஆகியவற்றால் பிரயாணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வீச்சுக் கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நகரில் உள்ளபாடசாலை ஒன்றிற்கு சென்ற மாணவி ஒருவர் நீரில் அடித்துசெல்லப்பட்டு மீனவர்களால் காப்பாற்றப்பட்டு மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

### பஸ் நிலையம் காந்தி சிலைப் பகுதிக்கு இடமாற்றம்

மட்டக்களப்பு பஸ்நிலையமும் நீரில் மூழ்கியிருப்பதால் பஸ் நிலையம் தற்காலிகமாக காந்திசிலை மைதானத்திற்கு மாற்றப்பட்டி ருக்கிறது

### இரு நூறு குடும்பங்கள் ஐ.சி.ஆர்.சியால் மீட்பு

இதேவேளை கிரான் பிரதேசத்தைச்சேர்ந்த புலிபாய்ந தகல், பெண்டுகள்சேனை, தரவை ஆகிய வயற்பிரதேசங் களைச் சேர்ந்த சுமார் இருநூறு பேரை சர்வதேச செஞ்சிலு வைச்சங்க படகுகள் மீட்டு கரை சேர்த்து ள்ளனர். இவர்கள் கிண்ணையடி பாடசாலையில் தஞ்சமடைந் துள்ளனர்.

## வயலுக்குள் ............

நேற்று காலை தொடக்கம் சுழியோடிகள் தோணிகளில் சென்று மீட்பு வேலைகளில் ஈடுபட்ட போதும் சடலம் மீட்கப்பட்டவில்லை.

ஏறாவூர் வடக்கு மேற்கு பலநோக்கு கூட்டுறுவுச்சங்கத்தின் மூலம் கிழக்குப்பல்கலைக் கழகத்தில் தொழிலாளராக வேலை செய்யும் மேற்படி இளைஞர் தமது வயலை சென்று பார்வையிட்டு வரும் போதே நீரில் மூழ்கி மரணமானார் என்பது குறிப்பிட த்தக்கது.

## சடலங்களை ஒப்படைக்க ஐ.சி.ஆர்.சி.முயற்சி

(யாழ் நிருபர்)

யாழ் குடாநாட்டில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து புலிகள் என சந்தேகித்து படையினரால் ஒப்படைக் கப்பட்ட சடலங்கள் ஞாயிறு மாலை யாழ் வைத்தியசாலையீல் ஒப்படை க்கப்பட்டதாக யாழ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சடலங்களை நேற்று திங்கட்கிழமை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் புலிகளிடம் ஒப்படைக்க எடுத்துச் சென்றதாக கூறப்படுகிறது.

## மாவீரர்........

கண்காணிப்பு நடவடிக்கை களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை வடக்கு கிழக்கிலும் இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் என்பனவும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## மூதூர் .......

டிப்போ வெளிமாவட்டங்களுக்கான போக்கவரத்து சேவைகளை நிறுத்தியுள்ளதாக மூதூர் போக் குவரத்துசாலை முகாமையாளர் வி.தம்பிராஜா தொரிவித்தார்.

## குறுகிய அரசியல் லாபம் தேடுபவர்களால் யுத்தம் தொடர்கின்றது

(நமது நிருபர்)

எமது நாட்டில் தொடரும் கொடிய யுத்தம் நிறுத்தப்படாமல் இருப்பது மனித நேயம் மிக்க மனிதர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

இந்த யுத்தம் கட்டியெழுப்பு வதற்கு காரணம் குறுகிய அரசியல் லாபம் தேடுபவர்களே யாகும் யுத்தத்தில் சிங்கள இளைஞர்களோ அல்லது. தமிழ் இளைஞர்களோ ப்லியா வதால் மனித உயிர்களே பலியாகின்றன. மேற்கண்டவாறு கதிர்காம ஜனாதிபதி வித்தியாலய அதிபர் கபூகம ஸ்ரீ சரணதேரர் நேற்று கதிர்காமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் எமது நாடு முன்னேற்றம் அடையா தத்ற்கு காரணம் இனவாதத்தை மக்களிடையே பரப்பிவிடுவ தேயாகும். தொடர்ந்தும் இனவாத த் தீ பரப்பப்பட்டால் நாமும் அழிந்து நாடும். அழிந்து விடும் எனவே இனியாவது இனப் பிரச்சினையை தூக்கிப் பிடிக்காமல் ஏனைய இனத்தவர்களுடன் இதயசுத்தியுடன் பழகி சமாதானத்தை வளர்தெடுப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

## என் அன்பிற்கினிய......

நீங்கள் வைத்திருக்கும் அபிமாத்னதையும் நம்பிக்கையும் கண்டு, உண்மையில் நாம் பிரமித்து நிற்கிறோம். எத்தனையோ வள, ஆளணிப்பற்றாக் குறைகளுடனும் கிழக்கில் ஒரே தினசரியாக 'தினக்கதிர்' ஆரம்பித்து அது தொடர்ந்து உங்கள் கரம் சேர நாம் கடுமையாக உழைத்து வருகிறோம். இதற்காக நாம் படும் துன்பங்களெல்லாம் வாசகர்களாகிய நீங்கள் காட்டிய ஆதரவைக் கண்டு மறைந்தோடி விட்டன. எனவே தொடர்ந்தும் உங்கள் 'தினக்கதிர்' இடையூறுகளின்றி வெளிவந்து மென்மேலும் வளர்ச்சி பெற வாசகர்களாகிய நீங்கள் முழு ஆதரவையும் தருவீர்கள் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

- ஆசிரியர் -

## விடுதலைப் ------

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் பத்தாவது அகவையை பூர்த்தி செய்யும் புலிகளின் குரல் வானொலிக்கு நேற்று தெரிவித்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்த தாவது பேரினவாத அரசானது எமக்கு எதிராக ஒரு ஆயுதப்போரை மட்டுமன்றி ஒரு கருத்துப் போரையும் நடத்தி வருகின்றது. உண்மைகளை மூடி மறைத்து பொய்யையும் புரட்டையும் புனைந்து சாணக்கியத் திறமை யுடன் நடத்தும் இந்த கருத்துப் போர் எமது விடுதலைப் போராட் டத்துக்கு களங்கம் கற்பிப்பதாகும்.

விடுதலைப் புலிகள் குழந்தைப்படை என கொச்சைப் படுத்தியும் பயங்கரவாதம் என சித்தரித்தும் எமது இயக்கத்திற்கு இழிவு தேடமுற்படுகின்றனர். என. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெற்கில் உள்ள தமிழ் கைதிகளை வடக்கு கிழக்கிற்கு மாற்றக் கோரிக்கை
### யாழ் சங்கம் வேண்டுகோள்

(யாழ் நிருபர்)

தென்பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை வடக்கு கிழக்கிற்கு இடமாற்ற வெண்டுமென வடக்கில் காணாமல் போனோர் பாதுகாப்புச் சங்கம் சட்டமா அதிப்ரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

இது தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி தீர்மானம் சங்கத்தினரால் எடுக்கப்பட்டது.

தமிழ்க்கைதிகளை வடக்கு கிழக்கு சிறைகளுக்கு மாற்றுதல், செம்மணி தொடர்பான வழக்க விசாரணையை யாழ் நீதிமன்ற த்தில் நடாத்துதல், யாழ் மாவட்டத்தில் உடனடியாக மேல் நீதிமன்றத்தை ஆரம்பிக்க வேண்டும் போன்ற தீர்மானங்களும் காணாமல் போனோர் உறவினர் சங்கத்தினரால் எடுக்கப்பட்டன.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.